## தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 232 - சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11 (1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்படும் விடயங்களினாலான தாக்கங்களை தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவகையில் ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாகநிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையானகொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடுசெய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடந்த ஆண்டு அறிக்கையின் பந்தி தொடர்பு | அமுல்ப்படுத்தப்படாத பரிந்துரைகள் | இவ்வாண்டு அறிக்கையின் பந்தி தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (அ) | கடந்த ஆண்டு நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதிக்கும் மீளாய்வாண்டு நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கும் இடையில் வித்தியாசம் காணப்பட்டது. | 1.6.1 (ஈ) |
| 1.6.1 (இ) | கடன்படுனர் மீதிகள் தொடர்பாக உறுதி செய்து கொள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை. | 1.6.1 (உ) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ – 02(iv) படிவம் மற்றும் ஏசீஏ – 02(v) படிவத்தில் நிகழ்சித் திட்டம் பிரகாரம் மற்றும் கருத்திட்டம் பிரகாரம் செலவின நிதியீட்டல் பொழிப்பில் உள்நாட்டு நிதியமாக ரூபா 12,569,000,000 மற்றும் வெளிநாட்டு ஏற்பாடாக தேறிய ஏற்பாடு ரூபா 2,000,000 ஆக குறிக்கப்பட | நிதியீட்டல் இலக்கம் 11 உள்நாட்டு நிதியத்தின் கீழ் தேறிய ஏற்பாடாக ரூபா 12,569,000,000 தொகை மற்றும் நிதியீட்டல் இலக்கம் 13 வெளிநாட்டு உதவியின் கீழ் ரூபா 2,000,000 தொகையாக குறிக்கப்பட வேண்டியதாகவும், எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாதவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டுமென குறித்த அலுவலர்களிற்கு அறிவுரை வழங்கியதாக | சுற்றறிக்கை பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதும், உள்நாட்டு நிதியத்தின் கீழ் தேறிய ஏற்பாடாக ரூபா 12,571,000,000 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ – 02 (ii) படிவத்தில் காட்டப்படும் செலவின கூற்றில் 2509-14 செலவின விடயத்தின் கீழ் நிதியீட்டல் குறியீடு இலக்கம் 13 என குறிப்பிடப்பட வேண்டிய போதும் அது 11 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாதவாறு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டுமென குறித்த அலுவலர்களிற்கு அறிவுரை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**(ஆ) அரச ஊழியர் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 திகதியன்று அரச ஊழியர் முற்பண கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அறவிட வேண்ய பேரேட்டுக் மீதி மொத்த பெறுமதி ரூபா 209,493,057 ஆனது. அவற்றில் திணைக்களத்தில் கடைமையாற்றும் அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி தவிர மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 11,256,020 ஆனதுடன், இம் மீதியினுள் ஓராண்டை விஞ்சிய நிலுவை கடன் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,166,507 ஆனது. | பல ஆண்டுகளாக சிறைச்சாலை தலைமையகத்தில் மற்றும் 29 சிறைசாலை நிறுவனங்களின் முற்பணக் கணக்குகளிற்குரிய நிலுவை கடன் மீதிகள் காணப்படுகின்றன. இந்த நிலுவை கடன் மீதிகள் ஓய்வு பெற்ற, மரணித்த, கடமையை விட்டுச் சென்ற, பணித்தடை செய்யப்பட்ட மற்றும் பணிநீக்கம் செய்யப்பட்டது என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த நிலுவை கடன், தாபன விதிக்கோவை XXIV அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை கடன் மீதியை அறவிட முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | அரச ஊழியர் முற்பண “பீ” கணக்கிற்குரிய இணக்கக் கூற்றுடன் சமர்ப்பிக்கும் இணைப்பு 3.8.1 இன் கீழ் சமர்ப்பிக்கும் ஏனைய நிலுவை கடன் மீதியின் கீழ் 03 ஆண்டுகளிற்கு அதிகமாக நிலவிவரும் ரூபா 401,153 ஆன கடன் மீதிகள் நிலவியதுடன், இக் கடன் மீதிகள் எந்த அலுவலரிடம் இருந்து அறவிடப்பட வேண்டுமென குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது. | 2023 திசெம்பர் 31 திகதியன்று ஆராய்சி சீர்திருத்த பயிற்சி நிலையத்தில் மற்றும் வாரியபொல சிறைச்சாலையில் இனங்காண முடியாத மீதிகளாக ரூபா 401,153 காணப்படுகின்றது. அவற்றில் ரூபா 2,095 தொகை ஆ.சீ.ப நிலையத்தில் நிலவுவதுடன், அது 2008 ஆண்டு முதல் நிலவும் கடன் மீதியாகையால், இனங்காண முடியாதுள்ளது. | நிலுவை கடன் மீதியை இனங்கண்டு விரைவில் அறவிடுவதற்காக முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) வைப்புக்கள்**

நிதிக்கூறுக்களிற்குரிய வைப்பு செலுத்துதல் மற்றும் மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலக்கம் 6000-0-0-006-0-081 கொண்ட வைப்புக் கணக்கில் 2023 திசெம்பர் 31 திகதி சிறைக் கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளிற்கு செலவு வைப்பது தொடர்பாக ரூபா 5,413,490 ஆன மீதி நிலவியதுடன், இந்த மீதியிலிருந்து ரூபா 805,661 அளவு அதாவது 15 சதவீதம் 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பொது வைப்புக் கணக்கில் நிலவின. | சிறைசாலை ஊதியம் உரித்தான சிறைக் கைதிகளிற்குரிய வங்கி கணக்கு ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வருவதுடன், விரைவில் குறித்த கணக்குகளை திறந்து அந்த சிறை ஊதியங்களை குறித்த சிறைக் கைதிகளின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு தயவுடன் அறிவிக்கிறேன். | சிறை ஊதியங்களை சிறைக் கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளிற்கு கால தாமதமின்றி செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இலக்கம் 6000-0-0-1-16 கொண்ட வைப்புக் கணக்கில் 2023 திசெம்பர் 31 திகதி அலுவலர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் பிணை தொகையாக ரூபா 4.234,468 ஆன மீதி நிலவியதுடன், இத் தொகை தொடர்பாக நிதிப்பிரமாணம் 885 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்த மீதியிலிருந்து ரூபா 995,603 அளவு அதாவது 24 சதவீத வைப்புக்கள் 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பிணை வைப்பு தொடர்பாக நி.பி. 885 பிரகாரம் முறையாக நடவடிக்கை எடுக்கவும் கணக்கு ஆரம்பிக்காத அலுவலர்களிறாகக விரைவில் கணக்கு ஆரம்பிக்க தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் அனைத்து நிறுவனங்களினதும் சிறைசாலை அதிகாரிகளிற்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 885 பிரகாரம் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூறுக்கள் பிரகாரம் நிதியல்லா சொத்து மீதி ரூபா 10,223,624,941 ஆன போதும், மீளய்வாண்டில் | கணக்காய்வு ஐயவினா இலக்கம் 06 நிதியல்லா சொத்துக்களின் கீழ் (அ), (ஆ), (இ), (ஈ), (உ) ஆகக் காண்பித்துள்ள | கடந்த ஆண்டில் நிதியல்லா சொத்துக்களின் ஏசீஏ – 6 படிவத்தில் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டில் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 10,042,573,381 ஆனதில் ஆரம்ப மீதிகளிற்கிடையில் ரூபா 181,051,560 ஆன வித்தியசாம் அவதானிக்கப்பட்டது. | மீதிகளிற்கிடையிலான வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிய தொழிநுட்ப அறிவு திணைக்களத்திற்கு இல்லாததால், அரச கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்பு பட்டு குறித்த சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியல்லா சொத்துக்களின் ஏசீஏ – 6 படிவத்தில் ஆரம்ப மீதி போன்றே திறைசேரி கணக்கு அறிக்கைகளில் காண்பித்துள்ள மீதிகள் சமப்பட வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 திகதியன்று நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் நிதியல்லா சொத்து மீதி ரூபா 10,223,624,941 ஆன போதும், மீளய்வாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ள திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ – 82 படிவம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 10,025,820,167 ஆனதில் ஆரம்ப மீதிகளிற்கிடையில் ரூபா 197,804,774 ஆன வித்தியசாம் அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டிற்குரியதாக இவ்வாறான மீதி இணக்காமை காணப்பட்டதுடன், அரச கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்பு பட்டு குறித்த சீராக்கங்களை மேற்கொண்ட போதும் மேற்குறித்த CIGAS நிகழ்சித் திட்டத்தின் புதிய திருத்தத்துடன் வெளியிட்ட அறிவுரை பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்த பின்னர் குறித்த பின்னர் குறித்த தவறுகள் மீண்டும் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது | கடந்த ஆண்டில் நிதியல்லா சொத்துக்களின் ஏசீஏ – 6 படிவத்தில் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டில் நிதியல்லா சொத்துக்களின் ஏசீஏ – 6 படிவத்தில் ஆரம்ப மீதி போன்றே திறைசேரி கணக்கு அறிக்கைகளில் காண்பித்துள்ள மீதிகள் சமப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கு செம்மையாக்கல் ரூபா 1,240,533,864 ஆன போதும், கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ள திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ – 82 படிவம் பிரகாரம் அது ரூபா 620,395 ஆனதில் ரூபா 1,239,913,469 ஆன வித்தியசாம் அவதானிக்கப்பட்டது. | | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ள திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ – 82 படிவம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கு செம்மையாக்கிய கூட்டுதல் சமப்பட வேண்டும். |
| (iv) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியுள்ள எஸ்ஏ – 82 படிவம் (ஏசீஏ – 6) பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 11,189,480,019 ஆன போதும், கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ள் எஸ்ஏ – 82 | | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் எஸ்ஏ – 82 படிவம் (ஏசீஏ – 6) மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ள திறைசேரி கணக்கு கூற்றுக்களில் எஸ்ஏ – 82 படிவத்தில் உள்ளடங்கும் |

| | | | |
|---|---|---|---|
| | படிவத்தின் பிரகாரம் அம் மீதி ரூபா 10,211,189,928 ஆனதில் இறுதி மீதிகளிற்கிடையில் ரூபா 978,290,091 ஆன வித்தியசாம் அவதானிக்கப்பட்டது. | | நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி சமப்பட வேண்டும். |
| (v) | கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ள் எஸ்ஏ – 82 படிவம் மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்சித் திட்டம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதிகளிற்கிடையில் ரூபா 978,290,091 ஆன வித்தியசாம் அவதானிக்கப்பட்டது. | | கணக்காய்விற்கு சமர்ப்பித்துள்ள் எஸ்ஏ – 82 படிவம் மற்றும் திணைக்கள சிகாஸ் நிகழ்சித் திட்டம் பிரகாரம் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதி சமப்பட வேண்டும். |
| (vi) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள ஏசீஏ – 6 படிவம் (எஸ்ஏ – 82) இன் செலவின விடயம் இலக்கம் 9152-2-1 மற்றும் 9152-2-2 கீழ் 2023 திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத் தொகையாக காண்பித்துள்ள போக்குவரத்து மற்றும் ஏனைய இயந்தி உபகரணங்களின் மீதி முறையே ரூபா 938,924,404 தொகை மற்றும் ரூபா 733,912,844 தொகையாக காட்டப்பட்ட போதும், அதன் உள்ளவாறான கூட்டுத் தொகை ரூபா ரூபா 938,863,254 மற்றும் ரூபா 733,973,994 ஆனது. | SA – 82 படிவம் சிகாஸ் இணைய இடை செயற்பாட்டின் மூலம் உருவாக்கப்படுவதால் குறித்த படிவத்திலுள்ள வித்தியாசங்களிற்கான காணரம் தொழநுட்ப காரணங்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள சொத்துக்களின் கூட்டுத் தொகையை சரியாக காண்பிக்க வேண்டும். |
| (vii) | 2023 ஆண்டில் சிறைசாலை நலன்புரி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைத்த ரூபா 6,815,234 ஆன நடைமுறையல்லா சொத்துக்களும்,அவற்றில் ரூபா 1,731,476 சொத்துக்களும் நீர்கொழுப்பு மற்றும் கொழும்பு ரிமாண்ட் சிறைசாலைகளிற்கு கிடைத்திருந்த பெறுமதி அறியப்படாத 09 விடயங்களிற்குரிய நிதியல்லா சொத்துக்களும் திணைக்கள நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியல்லா சொத்துக்களின் பெறுமதியை விரைவில் மதிப்பீடு செய்து சிகாஸ் தொகுதியினூடாக கணக்கீடு செய்யுமாறு குறித்த நிறுவனங்களிற்கு அறிவுரை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நலன்புரி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைக்கும் நிதியல்லா சொத்துக்கள் சிகாஸ் நிகழ்சித் திட்டத்தின் ஊடாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | இதற்கு மேலதிகமாக 2023 ஆண்டில் சிறைசாலை நலன்புரி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைத்த ரூபா 206,197 ஆன நிதியல்லா சொத்து வகைக்குரிய 20 விடயங்களிற்கு உரித்தான 198 உருப்படிகள் நுகர்வோர் சொத்தாக கருதி சிகாஸ் தொகுதிக்கு உள்ளடக்கி இருக்கவில்லை. | அன்பளிப்பாக அங்குனகொளபெலஸ்ஸ, களுத்துறை, போகம்பர, காலி மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளிற்கு கிடைத்த நிதியல்லா சொத்து வகைக்குரிய 20 விடயங்களிற்கு உரித்தான 198 உருப்படிகளை விரைவில் சிகாஸ் தொகுதிக்கு உள்ளடக்குமாறு குறித்த நிறுவனங்களிற்கு அறிவுரை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நலன்புரி நிதியத்திற்கு அன்பளிப்பாக கிடைக்கும் நிதியல்லா சொத்துக்களை சரியாக இனங்கண்டு சிகாஸ் நிகழ்சித் திட்டத்தின் ஊடாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(உ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கைத்தொழில் மற்றும் விவசாய முற்பண கணக்கில் காண்பித்துள்ள ரூபா 148,861.870 ஆன கிடைக்க வேண்டிய மீதிகளில் ரூபா 74,238,302 ஆன மீதிகளை உறுதி செய்து கொள்ளத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கைத்தொழில் பிரிவை நடாத்திச் செல்லும் சிறைச்சாலை நிறுவனத்தினால் அரச துறைக்கு மேற்கொண்ட விற்பனைகளில் ஒவ்வொறு ஆண்டிறுதியிலும் பட்டியல்களை தீர்க்கும் போது குறிப்பிட்ட அளவு நிலுவை பட்டியல் காணப்படுகின்றன. இந் நிலுவை பட்டியல்களின் பெறுமளவு 2015 ஆண்டிற்கு முன்னையதாக உள்ளதால், நிலுவை பட்டியல்களை தீர்ப்பதற்கு நிறுவனங்களிற்கு அறிவுரை வழங்கிய போதும் பழைய பட்டியல்கள் காணாமல் போயுள்ளதால் சரியான புள்ளிவிபரங்களை பெற்றுக் கொள்வது கடினமாகவுள்ளது. | மொத்த கடன்படுனர் மீதிகளையும் உறுதி செய்து கொள்ள தேவையான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மூலதன செலவு விடயங்கள் 10 இற்காக பெற்றுக் கொண்டிருந்த ரூபா 858,000,000 ஆன | மூலதன செலவு விடயங்கள் 10 இற்காக பெற்றுக் கொண்டிருந்த ரூபா 858,000,000 ஏற்பாடுகளில் 53 சதவீதத்திற்கு அதிகமாக | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு ஏற்பாடுகளில் ரூபா 456,087,246 ஆன ஏற்பாடு மீதியாக இருந்ததுடன், அந்த ஒவ்வொறு செலவின விடயங்களினதும் மீதி 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டது. | அதாவது ரூபா 456,087,246 ஆன ஏற்பாடு மீதியாக உள்ளதனை ஏற்றுக் கொள்வதுடன், குறித்த செலவின விடயங்களின் கீழான மீதிகளிற்கான காரணம் குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ii) | மூலதன செலவு விடயங்கள் 02 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 80,000,000 ஏற்பாட்டிலிருந்து நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ரூபா 54,300,000 தொகை ஏனைய செலவின விடயத்திற்கு மாற்றப்பட்ட பின்னர் ரூபா 25,565,658 தொகை எஞ்சியிருந்ததுடன், அந்த செலவின விடயங்களின் தேறிய ஏற்பாட்டின் மீது மேலும் சேமிப்பு 94 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டது. | 2104-4 செலவின விடயத்தின் கீழ் குறைந்த செலவு நிர்மாண தொழிநுட்பத்தை பயன்படுத்தி NERD நிறுவனத்தின் மதியுரையின் கீழ் நிறந்த போட்டி விலைமணு கோர போதிய காலம் இருக்காததால், இந்த செலவு விடயத்தின் ரூபா 46,500,000 ஆன ஏற்பாடு நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் வேறொரு செலவு விடயத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2104-7 செலவின விடயத்தின் கீழ் இந்த நிர்மாணங்களின் இறுதி பட்டியல்களை தீர்ப்பதற்கு கொடுப்பனவு செய்ய நேரிடும் எதிர்பார்த்த போதும் அவ்வாறான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாததால் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏற்பாடு தேவையுள்ள வேறு செலவு விடயங்களிற்கு மாற்ற நடவடிக்கை எடுத்த பின்னர் குறித்த செலவு விடயத்தில் ரூபா 2,065,658 ஏற்பாட்டு அளவு பயன்படுத்த முடியாது எஞ்சியது. | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | 2022 திசெம்பர் 17 திகதி மற்றும் இலக்கம் 09/2022 கொண்ட வரவு செலவு திட்ட சுற்றறிக்கை மூலம் வழியுறுத்தப்பட்டடுள்ள மற்றும் வரவு செலவு மதிப்பீடுகளின் முன்னுரையில் 3.1 இன் (i) முதல் (xii) வரை குறிப்பிட்டுள்ள செயல்களிற்கு உரியதாக மாத்திரம் மேலதிக ஏற்பாட்டு கோரிக்கை மட்டுப்பட வேண்டிய போதும், அதற்கு இணங்காது திணைக்களத்தினால் | (i) முதல் (xii) வரை குறிப்பிட்டுள்ள செயல்களிற்காக மாத்திரம் மேலதிக ஏற்பாட்டு கோரிக்கை மட்டுப்பட வேண்டிமென வலியுறுத்தப்பட்டுள்ள போதும், திறைசேரி கட்டளைகள் சட்ட பிரகாரம் சிறைச்சாலை கைதிகளிற்காக 1203 செலவு விடயத்திற்கு 2022 ஆண்டில் தீர்க்கப்படாத ரூபா 1,485.9 மில்லியன் பட்டியல்களிற்கு 2023 ஆண்டின் ஏற்பாடுகள் மூலம் கொடுப்பனவு செய்ததால் 2023 ஆண்டிற்காக ரூபா 1,888.7 மில்லியன் மாத்திரம் ஏற்பாடு எஞ்சியது. சிறைப்படுத்தப்பட்டுள்ள 28,500 இற்கு கிட்டிய கைதிகளில் | தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவு விடய இலக்கம் 1202, 1203 மற்றும் 1403 இற்காக முறையே ரூபா 120,000,000 தொகை, ரூபா 1,500,000,000 தொகை மற்றும் ரூபா 120,000,000 தொகையாக கூட்டுத் தொகை ரூபா 1,740,000,000 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடாக பெறப்பட்டிருந்தனது. | 90 சதவீதத்திலும் அதிக அளவிற்கு இது வரை தீர்க்கப்படாத வழக்குகள் காணப்படுவதால், தீவு முழுவதும் அமைந்துள்ள நீதிமன்றங்களிற்கு கைதிகளின் போக்கு வரத்திற்கான எரிபொருள் விலை வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கும் காலத்தில் காணப்பட்ட விலைக்கு ஒப்பாக அதிகரித்தமை, கைதிகளுக்கு உணவு சமைப்பதற்கான எரிவாயு, பர்னஸ் எரிபொருள் மற்றும் விரகிற்கான செலவு அதிகரித்தமை, 2023 ஆண்டில் மின் அலகொன்றிற்கான கட்டணம் மற்றும் நீர் கட்டணமும் திருத்தத்தின் பிரகாரம் திணைக்களத்தின் மின் மற்றும் நீர் செலவுகள் அதிகரித்த காரணத்தால் இந் நிலைமை ஏற்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒனறை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன், இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டுமெனவும், அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், | ஏதிர்காலத்தில் குறித்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்விற்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவையானவாறு குறித்த கால எல்லையினுள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் பதில் வழங்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி போதும், அறிக்கையின் 3.8 பந்தி பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குணக்காய்வு ஐயவினாக்களிற்கு விரைவில் பதில் வழங்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | **அவதானிப்பு** | | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு** | **பெறுமதி (ரூபா)** | **இணங்காமை** | | |
| (அ) | 1951 இன் 14 இலக்க மோட்டார் வாகன சட்டம் 25(1) | - | சிறைச்சாலைகள் திணைக்களத்தில் ஓட்டத்தில் ஈடுபடுத்தியிருந்த 32 வாகனங்களிற்காக சட்ட பிரகாரம் ஏற்புடைய வருமான அனுமதிப் பத்திரம் 2023 ஆண்டிற்காக பெற்றிருக்கவில்லை | வாகன வருமான அனுமதிப் பத்திரம் காலாவதியாக ஒரு வாரத்திற்கு முன்னர் புதிய வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள நிறுவன அத்தியட்சகர்களை அறிவுருத்தியுள்ளதுடன் , தாமதம் ஏற்பட்டால் அந்த அலுவலரிடம் காரணம் கோருமாறும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மோட்டார் வாகன சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் ஏற்புடைய வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை | | துணைச் சட்டம் விதிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | |
| (i) | 272 (3) | 172,241 | சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆராய்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் 06 கொடுப்பனவு வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இக் குறைகளை தவிர்த்துக் கொள்ள தனியான அலுவலர் ஒருவரை நியமித்து அதி கண்காணிப்பின் கீழ் உரியவாறு வவுசர் பத்திரங்களை கணக்காய்விறகு அனுப்புமாறு தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 272(3) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 571 | 10,834,706 | பொது வைப்புக் கணக்கு 04 இற்குரிய 02 ஆண்டுளை கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது வைப்புக் கணக்கு தொடர்பாக நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க அனைத்து நிறுவனங்களினதும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 770 (4) | - | சிறைச்சாலைகள் திணைக்களத்தில் காணப்படும் 31 வாகனங்கள் தொடர்பில் பராதீன நடவக்கைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் மேலும் 34 வாகனங்கள் தொடர்பில் பராதீன நடவடிக்கைகளுக்கு பரிந்துரை பெற்றிருந்த போதும் இது வரை பராதீன நடவடிக்கைகளை முடிவுறுத்தி இருக்கவில்லை | சிறைச்சாலைகள் திணைக்களத்தில் காணப்படும் பராதீனம் செய்ய வேண்டிய வாகனங்கள் தொடர்பில் குறித்த பரீட்சிப்பு வேலைகளை மேற்கொண்டு விரைவில் முன்நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 770(4) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 756 (6) | - | கடந்த ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கை எதிர்வரும் ஆண்டு ஜுன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், 2022 | இது வரை இரண்டு நிறுவனங்களிற்குரிய 2022 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு அறிக்கைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க | நிதிப் பிரமாணம் 756(6) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஆண்டின் மட்டக்களப்பு சிறைச்சாலையின் மற்றும் ஆராய்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் பண்டகக் கணிப்பீட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், மேலும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அனைத்து நிறுவனங்களினதும் பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்படும் பண்டங்கள் தொடர்பில் உரியவாறு நடவடிக்கை எடுப்பது தொடர்பிலான அறிக்கை இது வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதுடன், பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்படும் பண்டங்கள் தொடர்பில் உரியவாறு நடவடிக்கை எடுப்பது தொடர்பான அறிக்கையை விரைவில் சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.4 முற்பணம் விநியோகித்தல் மற்றும் தீர்த்தல்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிதி பிரமாணம் 371(2)(ஆ) பிரகாரம் பதிவிநிலை அல்லாத அலுவலர் ஒருவருக்கு நிமித்த உப கட்டுநிதி வழங்க முடியாத போதும், ஆராய்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் பதவிநிலை அல்லாத 05 அலுவலர்களிற்கு 38 சந்தர்பங்களில் நிமித்த உப கட்டுநிதியாக ரூபா 699,280 தொகை வழங்கப்பட்டிருந்தது. | பொது நிதி சுற்றறிக்கை 01/2020 மூலம் திருத்திய நிதி பிரமாணம் 371(2)(ஆ) பிரகாரம் இதன் பின்னர் அனைத்து பயிற்சி நிகழ்சித் திட்டங்களிற்கும் பதிவிநிலை அலுவலர் ஒருவரினால் முற்பணம் பெறப்பட்டு பணி முடிவடைந்த உடனே முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுரை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அவ்வாறு பெற்றுக் கொண்ட முற்பணத்தை பணி முடிவடைந்த உடனே தீர்க்க வேண்டிய போதும், சிறைச்சாலை தலைமையகத்தில் மற்றும் ஆராய்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தில் பல்வேறு பணிகளிற்கு 70 சந்தர்பங்களில் வழங்கியிருந்த ரூபா 1,536,560 ஆன முற்பணம், தீர்க்க வேண்டிய திகதியிலிருந்து 07 தினங்களிற்கும் 290 தினங்களிற்கும் இடையிலான காலம் தாமதமாகி தீர்க்கப்பட்டிருந்தன. | அலுவலர்களிற்கு நிமித்த உப கட்டுநிதி வழங்கும் போது குறித்த பணி முடிவடைந்த உடனே அதனை தீர்க்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கடமை செயற்பாடுகளில் ஏற்பட்ட சிறு தாமதம் காரணமாக முற்பணம் தீர்ப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணம் 371(5) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்படி தீர்த்திருக்காததால சிறைச்சாலை தலைமையகத்தில் மற்றும் ஆராய்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தில் 46 சந்தர்பங்களில் பெற்றுக் கொண்ட ரூபா 1,202,210 ஆன முற்பணத் தொகைக்குரிய ரூபா 389,773 தொகை 07 தினங்களிற்கும் 169 தினங்களிற்கும் இடையிலான காலம் குறித்த அலுவலர்களிடம் காணப்பட்டுள்ளது. | அலுவலர்களிற்கு நிமித்த உப கட்டுநிதி வழங்கிய பின்னர் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்படாத வாறு நி.பி. 371(2) பிரகாரம் குறித்த பணி முடிவடைந்த உடனே அதனை தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பிரிவு மற்றும் பதவிநிலை அலுவலர்களிற்கு அறறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 371(5) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது ஆண்டினுள் செயற்படுத்தப்படும் உண்மையான செயற்பாடுகளை இனங்கண்டு பெயரளவு (Dummy) செயற்பாடுகளிற்கு ஏற்பாடு மதிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் உண்மையான செயற்பாடுகளின் பிரகாரம் ஆண்டிறுதியில் செயல் நடவடிக்கை திட்டம் திருத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிறுவனத்தினால் மேற்கொள்ளும் அனைத்து செயல்களையும் (பண்டங்கள், சேவை மற்றும் கருத்திட்டம்) பூரணப்படுத்த பயன்படுத்தும் கருவியொன்றாக செயல் நடவடிக்கை திட்டத்தை பயன்படுத்த இயலாதிருந்ததுடன், சிக்கனம், வினைத்திறன் மற்றும் ஆக்கபூர்வமாக காலரீதியாக திட்டத்தை தயாரிக்க எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் குறிப்பான செயல்களை இனங்காணாது பெயரளவில் (Dummy) ஏற்பாடு ஒதுக்கப்படுவது செலவு விடயம் 2001, 2002, 2003 இற்கு ஆவதுடன், இந்த மூன்று செலவு விடயங்களிலும் செயல்களை முன்கூட்டி ஊகிக்க முடியாத திட்டவட்டமற்ற சந்தர்ப்பத்திற்கு ஏற்ற எழுகின்ற கட்டிட திருத்தம், இயந்தி உபகரணங்கள் மற்றும் வாகன திருத்தங்கள் ஆவதனாலாகும். அவ்வாறாயினும், அலுவலர்களினால் கடந்த ஆண்டுகளின் அனுபவத்தின் அடிப்படையில் செலவாகும் என எதிர்பார்க்கும் தொகைக்கு ஈடாகும் ஏற்பாடு அளவு ஒதுக்கப்படுகின்றது. குறித்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டு அளவையே செயற்பாடுகளிற்கு சந்தர்பத்தின் முன்னுரிமை மீது சிறப்பாக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், அதற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட திருத்தம் மற்றும் அதன் மூலம் அடைந்து கொண்ட முன்னேற்றத்தை மாதாந்த முன்னேற்ற அறிக்கை, முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் மூலம் அவதானிப்பதுடன், இலக்கு மயப்படுத்தப்பட்ட செயல்களை முகாமைத்துவம் செய்யும் கருவியொன்றாக செயல் நடவடிக்கை திட்டம் செயற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது நிதி சுற்றறிக்கை 02/2020 பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த விளைவுகளை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தீவின் பாடசாலை மாணவர்களிற்கு கலவியை வழங்க தேவையான மனிதவளம் மற்றும் பௌதீக வளங்கள் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படும் சந்தர்ப்பத்தில் தேசிய பாடசாலையொன்றாக நடாத்திச் செல்லும் வட்டரெக்க இளைய குற்றவாளிகளின் பயிற்சி வித்தியாலயத்திற்கு வளங்கியுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களிற்கு ஒப்பாக போதிய மாணவர் எண்ணிக்கை இல்லாமை மற்றும் கல்வி கற்கும் மாணவர்களிற்கும் மிகவும் பொருத்தமான முறைமை செயற்படாமை காரணமாக இந்த கருத்திட்டத்தின் மூலம் வெற்றிகரமான விளைவுகளை அடைந்து கொள்ள இயலாதிருந்தது. | கல்வி அமைச்சுடன் இணைந்து எதிர்காலத்தில் மகவும் வெற்றிகரமான விளைவுகளை பெற்றுக் கொள்ள முடியமான பொருத்தமான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கல்வி அமைச்சுடன் கூட்டிணைந்த தேசிய பாடசாலையின் பிரமாணங்கள் பிரகாரம் முறையாக நடாத்திச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறைசாலைகளில் காணப்படும் அதிக நெரிசலிற்கு தீர்வாக நீர்கொழுப்பு, பல்லன்சேன இளைஞர் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்தில் அவசர தேவைப்பாடுகளை சீர்திருத்த கருத்திட்டத்திற்காக 2019 ஆண்டில் தேசிய கொள்கை திட்டமிடல் திணைக்களம் ரூபா 135 மில்லியனான கருத்திட்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து 2020 செப்டம்பர் 28 திகதி வேலைகளை ஆரம்பித்து, 2020 திசெம்பர் 31 திகதி வேலைகளை பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 திகதயளவில் பிரதான 11 வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்ததுடன், அந்த 07 வேலைப் பகுதிகளிற்கான மதிப்பீட்டு செலவு ரூபா 10,478,341 ஆனதுடன், ஏற்பாட்டு அளவு ரூபா 10,125,031 ஆனது. இன்னும் 04 வேலைப் | இக் கருத்திட்டம் 2020 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும், நாட்டில் காணப்பட்ட நிலைமை மற்றும் இலங்கை கடற்படை மூலம் வேலைத் தளத்திற்கு பொருட்களை வழங்குதல் மற்றும் பெறுகைகள் மற்றும் ஏனைய காரணங்களினால் ஏற்பாட்ட பிரச்சினைகளின் மீது சிவில் பாதுகாப்பு திணைக்கள ஊதிய பங்களிப்பின் பிரச்சினை மற்றும் நிர்மாண தளத்தின் நிலக்கீழ் நீர் மட்டம் மிகவும் கிட்டிய மட்டத்தில் அமைந்துள்ளமையும் இந்த செயற்பாட்டை முன்கொண்டு செல்வதில ் பிரச்சினையாக இருந்தது. விஷேடமாக மலசல கழிவு நீர் தொகுதி இலங்கை கடற்படையின் மூலம் வேறாக | கருத்திட்டத்தினை திட்டமிட்ட காலத்தினுள் பூர்த்தி செய்து,எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்ள முறையான நிகழ்சித் திட்டமொன்றை செயற்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பகுதிகளிற்கு இதுவரை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கருத்திட்ட நிர்மாணத்திற்காக சிவில் பாதுகாப்பு திணைக்கள தலைப்பில் செலுத்திய சம்பளம் மற்றும் மேலதிக நேர செலவு தவிர இது வரை ரூபா 105 மில்லியனிற்கு அதிக செலவு மேற்கொள்ளப்பட்டு இருந்த போதும், 2024 பெப்ரவரி 06 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 136(1) பிரகாரம் குறித்த சேவையை உரிய அதிகாரத்திற்கு காப்பு வழங்கியுள்ள செலவினத்தில் அல்லது அதிகாரமளிக்கப்படும் நிதி ஏற்பாட்டிற்கு உட்பட வேண்டியதுடன், அதற்கு இணங்காது திறைசேரி அங்கீகாரமும் இன்றி பல்லன்சேன இளைஞர் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் பணிகளை மேற்கொண்டு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆளணியினரிற்கு 2021 ஆண்டின் ஆரம்பம் முதல் 2023 ஆண்டிறுதி வரை சிறைக்கைதிகள் திணைக்களத்தினால் இணைந்த படிகளாக ரூபா 22,293,250 செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக்கோவையின் XIV அத்தியாயத்தின் 1.3 பிரிவிற்கு இணங்காது இந்த கருத்திட்டத்தின் ஈடுபட்டுள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆளணியினரிற்கு 2020 நவம்பர் மாதம் முதல் 2021 திசெம்பர் மாதம் வரையான காலத்திற்கு இணைந்த படிகளை வழங்கி சிறு நிருவாக பெறுகைகள் சபை தீர்மானத்தின் பிரகாரம் அவர்கள் பெற்றுக் கொண்ட உணவு பானங்களிற்காக சிறைச்சாலை சிற்றுண்டிச் சாலைக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,677,625 தொகை இந்த கருத்திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது.

பெறுகை செய்து மேலதிக ஒப்பந்தமாக பெற்றுள்ளது. அதன் மதிப்பீட்டு பெறுமதியை தரைப்படையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ளடங்குவதில்லை.

இதற்காக முன்னேற்ற மீளாய்வு கூட்டம் அநேக தடவைகள் நடாத்தி தேவையான அறிவுரைகள் குறித்த தரப்பினரிற்கு வழங்கியுள்ள போதும், அந்த தரப்பினரிற்கு நேரடி தாக்கத்தை செலுத்த எமது திணைக்களத்திற்கு முடியாதுள்ளது. எதிர்வரும் அத்தியவஷிய மேலதிக மூலப்பொருடகளை சிறைச்சாலை திணைக்களத்தின் பல்லன்சேன நிறுவனத்தினால் பெறுகை செய்து வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2019 ஒக்டோபர் 19 திகதி கேகாலை சிறைசாலை வளவினுள் இடம்பெற்ற மண்சரிவு காரணமாக சீரற்ற நிலத்தை சீராக்குவதற்கு கீழால் மதிலொன்றை நிர்மாணித்தல் மற்றும் மண்சரிவு இடம்பெற்ற இடத்திலுள்ள மதிலை திருத்த ரூபா 20,667,766 தொகை செலவிடப்பட்டிருந்தது. மதிலின் உடைந்த பகுதியை காப்புச்

இந்த மதிலின் எஞ்சிய பகுதியை மற்றும் ஏனைய நிர்மாணங்களையும் பாதுகாத்துக் கொள்ளதற்கு உரியதான நிர்மாணங்களை மேற்கொள்ள தற்போது பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அகற்றப்பட்ட மதிலின் பகுதி

தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் முழு அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| செய்வதற்காக பாதுகாப்பு தகடொன்று மற்றும் பாதுகாப்பு கம்பி வேலியொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், மீண்டும் மண்சரிவு அல்லது மதில் உடைந்து விழக்கூடிய இயலுமை காணப்படுவதால் கைதிகள் மற்றும் அலுவலர்களின் உயிர்களிற்கு ஆபத்தான நிலைமை காணப்படுவதுடன், அதன் பிரகாரம் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு மதில் நிர்மாணித்தல் அத்தியவஷியமென அவதானிக்கப்பட்டது. | பாதுகாப்பு தகடு மற்றும் கம்பி வேலியுடன் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த நிர்மாணங்கள் நிறைவடைந்த பின்னர் அத் தற்காலிக நிர்மாணத்தை அகற்றி நிறுவனத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி 3.4.1 மற்றும் பெறுகை கையேடு 2.14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு பிராந்திய பெறுகைகள் குழுவின் மூலம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது சந்தை ஒப்பீட்டு முறையை பின்பற்றி 05 முத்திரை இடப்பட்ட விலைகளுக்குக் குறையாமல் அழைப்பிக்க வேண்டும். எனினும் அதற்கு இணங்காது களுத்துறை சிறைச்சாலையில் 2023 ஆண்டின் முதல் 08 மாதங்களினுள் 03 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் விலைகளை கோரி 12 சந்தர்ப்பங்களில் பெறுமதி ரூபா 1,184,320 ஆன கொள்வனவு மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 ஆண்டின் முதல் 06 மாதங்களினுள் 03 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் விலைகளை கோரி 03 சந்தர்ப்பங்களில் பெறுமதி ரூபா 315,375 ஆன கொள்வனவுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த கொள்வனவுகளிற்காக பதிவு செய்த வழங்குனர்கள் அல்லது டெலிகொம் ரேன்போ பக்களில் பட்டியலிடப்பட்டுள்ள வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் குறித்த கொள்வனவுகள் செய்யப்பட வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பத்தி 3.4.1 மற்றும் பெறுகை கையேடு 2.14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு பிராந்திய பெறுகைகள் குழுவின் மூலம் பொருட்களை கொள்வனவு செய்யும் போது சந்தை ஒப்பீட்டு முறையை பின்பற்றி 05 முத்திரை இடப்பட்ட விலைகளுக்குக் குறையாமல் அழைப்பிக்குமாறும் கொள்வனவு செய்வதற்காக பதிவு செய்த வழங்குனர் அல்லது டெலிகொம் ரென்போ பக்களில் பட்டியலிடப்பட்டுள்ள வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் குறித்த கொள்வனவுகளை செய்யமாறும் அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிற்கும் அறிவுரை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி 2.5.1(அ) பிரகாரம் கவனத்திற் கொள்ளப்படும் பெறுகைகள் செயற்பாடுகளிற்கு நிதி கிடைப்பதென பெறுகைகள் குழு அங்கத்தவர்கள் குழுவாக, தனிப்பட்ட விதத்தில் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறாயினும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் ரூபா 856,195 பெறுமதியான காவல் கூட மழை உறைகளை பொருத்துவதற்கு பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு பெறுகைகள் தீர்மானம் 2022 ஒக்டோபர் 24 திகதி எடுக்கப்பட்டிருந்த போதும் ஏற்பாடு கிடைக்காததால் ஒப்பந்த ஒப்படைப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாட்டு அளவை பயன்படுத்தி 31 சிறைச்சாலை நிறுவனங்களின் காணப்பட்ட மேம்படுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் சில நிறுவனங்களில் காணப்பட்ட பல பிரச்சினைகளின் மீது (சிறை ஊதியம், தொழிநுட்ப அலுவலர்கள் இல்லாமை, வேலை பரிசோதகர்கள் இல்லாமை மற்றும் பொருட்கள் வழங்குனர் குறித்த விலையில் வழங்க விரும்பாமை போன்ற) ஏற்பாட்டை உரியவாறு பயன்படுத்தப்படவில்லை. இந்த கூறைக்காக அங்கீகாரம் கிடைத்த போதும் ஒதுக்கியிருந்த ஏற்பாடு முடிவடைந்ததன் மீது இந்த பணிகள் எதிர்வரும் ஆண்டினுள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏக்கர் 363.64 ஆன காணிகளின் உரிமை சிறைச்சாலை திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்பட்ட போதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாததால் கணக்கீடு செய்யப்படவில்லை. | உரிமையை சுவீகரித்திருந்த போதும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாததால் கணக்கீடு செய்யப்படாத காணிகலிற்காக மதிப்பீட்டறிக்கையை விரைவில் பெற்றுத்தருமாறு மாகாண மதிப்பீட்டு அலுவலகங்களிடம் மற்றும் அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரிடம் கோரப்பட்டுள்ளது. | சிறைச்சாலை திணைக்களத்திற்கு சொந்தமாக காணப்படும் காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சிறைச்சாலைகள், சிறைக் கூடங்கள், திறந்தவெளி சிறை முகாம்கள், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் பண்ணைகள் என சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட 390.98 ஏக்கரான காணிகளின் உரிமைகளை சுவீகரித்திருக்கவில்லை. | இதுவரை சுவீகரிக்கப்படாத காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிப்பதுடன், இது தொடர்பில் அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்களிடமும் விஷேட கவனம் செலுத்தி சுவீகரிக்கப்படாத காணிகளை | இக் காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விரைவில் சுவீகரிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | அகுனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 64 பாதுகாப்பு கெமராக்கள், 02 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், தகவல் முகாமைத்துவ தொகுதிக்கு சொந்தமான தரவுகளை உள்ளிடுவதற்கு பயன்படுத்தப்படும் ஓர் கணனி மற்றும் 02 கைரேகை இயந்திரங்கள் விளைவற்ற சொத்துகளாக இருந்தன. | திருத்தம் செய்து பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | விளைவற்ற சொத்துக்களை பொருத்தமானவாறு திருத்த அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாதிரி கணக்காய்வின் போது அகுனகோலபெலஸ்ஸ சிறைச்சாலையில் உள்ள 47 பொது சேவை இல்லங்கள், வெதுப்பக பிரிவின் சொத்துக்கள், தலுபத இளைஞர் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்தில் புலொக் கல் இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், புடவை தறி இயந்திரங்கள் போன்ற 49 பல்வேறு இயந்திரங்கள், நீர்கொழும்பு சிறைச்சாலையில் பிரதி எடுக்கும் இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள் போன்ற 11 இயந்திரங்கள், வடரெக சிறைச்சாலையில் ஒரு புலொக் கல் தயாரிக்கும் இயந்திரம், 20 இரும்பு படுக்கைகள் மற்றும் ஒரு தண்ணீர் பவுசர் ஆகியவை குறை பயன்பாட்டு சொத்துக்களாக காணப்பட்டன. | குறை பயன்பாட்டு சொத்துக்களாக காணப்படும் பொருட்கள், தேவைப்பாடுள்ள ஏனைய நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு வழங்க தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குறை பயன்பாட்டு சொத்துக்களை முழு கொள்ளளவுடன் பயன்படுத்த முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (உ) | 2023 செப்டம்பர் 07 திகதி சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நடந்த கணக்காய்வு முகாமைத்துவ கூட்டத்தில் பொறியியல் (இயந்திர) பிரிவின் கீழ் முன்னேற்றத்தை அறிக்கையிடும் போது மஹர பிரதான ஜேலர் உத்தியோகபூர்வ இல்லத்தில் 2017 முதல் நிறுத்தப்பட்டிருந்த 18-8096 இலக்க கார் வண்டியை 2023 பெப்ரவரி 28 திகதியளவில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.<br>கணக்காய்வின் மூலம் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது இந்த வண்டி மஹர சிறைச்சாலையில் இருக்காததுடன், சிறைச்சாலை தலைமையத்தின் கட்டளையின் மீது இரத்மலானயில் அமைந்துள்ள தொழிநுட்ப கல்லூரியொன்றிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்ட போதும், அதனை முறையாக ஒப்படைத்ததற்கான எவ்வித சான்றும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | மஹர சிறைச்சாலைக்கு சொந்தமான இந்த வண்டிக்கு உரியதான அனைத்து கடிதக் கோவைகளும் மஹர சிறைச்சாலையில் நடந்த புரட்சிக்கு சந்தர்ப்பத்தில் அழிந்துள்ளது. அதனை இரத்மலானயில் அமைந்துள்ள தொழிநுட்ப நிறுவனமொன்றிற்கு ஒப்படைத்துள்ளதாகவும், அது தொடர்பான எவ்வித ஆவணமும் தேடிக் கொள்ள முடியாதெனவும், மஹர சிறைச்சாலை அதிகாரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 156(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலக்கம் PA-7034 கொண்ட கெப் வண்டி 2013 ஆண்டில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினால் முறையான ஒப்படைத்தலின்றி சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தழுபொத இளைஞர் குற்றவாளிகளின் சீர்திருத்த நிலையத்திற்கு வழங்கியதால் திருத்தங்களை செய்து கொள்ள முடியாதன் காரணமாக 2013 ஆண்டு முதல் இது வரை கெப் வண்டியை செலுத்துவதற்கு பயன்படுத்த முடியாதுள்ளது. | இக் கெப் வண்டியை திருத்துவதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளதுடன், திருத்தங்களை மேற்கொள்வது பொருளாதார ரீதியாக நன்மையற்றதால் முறையாக திணைக்களத்திற்கு சுவீகரித்த பின்னர் பராதீன நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையாக சுவீகரித்து 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 பிரகாரம் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | 2021 மாரச் 24 திகதி முதல் வவுனியா சிறைச்சாலைக்கு சொந்தமான இலக்கம் PH-1916 கொண்ட வேன் வண்டியை மற்றும் 2022 மே 14 திகதி முதல் சிறைச்சாலை தலைமையகத்திற்கு சொந்தமான இலக்கம் PA-8709 கொண்ட கெப் வண்டியை திருத்துவதற்காக வெளி நிறுவனங்களிற்கு ஒப்படைத்து 03 ஆண்டுகளிற்கு அதிக காலமாக அந் நிறுவனங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | வவுனியா சிறைச்சாலைக்கு சொந்தமான இலக்கம் PH-1916 கொண்ட வேன் வண்டியின் திருத்தத்திற்காக தற்போது அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், சிறைச்சாலை தலைமையகத்திற்கு சொந்தமான இலக்கம் PA-8709 கொண்ட கெப் வண்டியின் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் குறித்த திருத்தங்களின் பின்னர் நிறுவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 பிரகாரம் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஏ) | காணக்காய்வு மாதிரி பரீட்சிப்பின் போது கொழும்பு ரிமாண்ட், அங்குனகொலபெலஸ்ஸ, நீர்கொழும்பு சிறைச்சாலை மற்றும் தலுபொத இளைஞர் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்தில் 13 பேருந்து வண்டிகள் மற்றும் நோயாளர் வண்டியொன்றின் மைலோ மாணி 03 மாதங்களிற்கும் 04 மாதங்களிற்கும் இடையில் செயலற்று காணப்பட்டதுடன் இக் காலத்தினுள் கிலோ மீற்றர் 395,688 செலுத்த 95,392 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மைலோ மாணி செயலிழந்துள்ள கொழும்பு ரிமாண்ட், அங்குனகொலபெலஸ்ஸ, நீர்கொழும்பு சிறைச்சாலைகளின் வாகனங்களின் மைலோ மாணிகளின் திருத்த வேலைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கியள்ளதுடன், தலுபொத இளைஞர் குற்றவாளிகள் பயிற்சி கல்லூரிக்கு சொந்தமான வாகனத்தின் மைலோ மாணி தற்போது திருத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயலிழந்த மைலோ மாணிகளை திருத்த நடவடிக்கை எடுக்க வெண்டும். |

## 3.6 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (01) கீழ் சமர்ப்பித்திருந்த மேலும் அறவிட வேண்டிய அல்லது பதிவழிக்க அல்லது கைவிடவுள்ள நட்டங்கள் மற்றும் சம்பவங்களிற்கு இடையில் 10 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் 28 வாகன விபத்துக்கள் உள்ளிட்ட 33 சம்பவங்களிற்கு உரிய நட்டம் ரூபா 36,220,218 உம், 05 ஆண்டுகளிற்கும் 10 இற்குமிடையிலான காலம் நிலவிவரும் 79 வாகன விபத்துக்கள் உள்ளிட்ட 80 சம்பவங்களிற்குரிய நட்டம் ரூபா 15,651,990 உம், 2023 ஆண்டில் நேர்ந்த 30 வாகன விபத்துக்கள் உள்ளடங்களாக 05 ஆண்டுகளிலும் குறைந்த காலமாக நிலவிவரும் 77 விபத்துக்கள் உள்ளடங்களாக 78 சம்பவங்கள் தொடர்பான நட்டம் ரூபா 49,955,804 தொகையும் அவதானிக்கப்பட்டன. இந்த நட்ட சேதங்களில் 06 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக ரூபா 2,937,032 ஆன நட்டத்தை புத்தகங்களில் இருந்து பதிவழிக்க பரிந்துரைத்துள்ள போதும், நீதிமன்ற, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் இது வரை கிடைக்கவில்லை. | அங்கீகாரம் கிடைத்த பின்னர் பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இணைப்பு (01) கீழ் சமர்ப்பித்திருந்த மேலும் அறவிட வேண்டிய அல்லது பதிவழிக்க அல்லது கைவிடவுள்ள நட்டங்கள் மற்றும் சம்பவங்கள் உள்ளிட்ட 2017 முதல் 2021 இறுதி வரை இடம்பெற்ற 05 நட்டங்களின் நட்டத்தை 2024 பெப்ரவரி 28 திகதி வரை மதிப்பிட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள மேலும் அறவிட வேண்டிய அல்லது பதிவழிக்க அல்லது கைவிடவுள்ள நட்டங்கள் மற்றும் சம்பவங்கள் உள்ளிட்ட 05 சம்பவங்களின் நட்டத்தை மதிப்பீடு செய்ய குறித்த நிறுவனத்திற்கு அறிவித்து விரைவில் அப் பெறுமதியை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகன விபத்துக்கள் உள்ளிட்ட நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 இல் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 104(03) பிரகாரம் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க 07 நாட்களிற்கு அதிக காலம் தாமதிக்கும் என எதிர்பார்ப்பின் காணாமல் போனதும் நட்டமும் தொடர்பாக ஆரம்ப அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும். எனினும் சிறைசாலைகள் திணைக்களத்தின் 1998 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலத்தினுள் இடம்பெற்றுள்ள 122 நட்ட சேதங்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | ஆரம்ப அறிக்கையை அனைத்து நிறுவனங்களின் ஊடாக பெற்றுக் கொள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் இலக்கம் - 08/2023 மற்றும் 2023 மார்ச் 29 திகதிய திணைக்கள சுற்றறிக்கை ஊடாக அறிவித்து அனுப்பியுள்ளதுடன், குறித்த அறிக்கை கிடைக்கும் ஒழுங்கில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப்பிரமாணம் பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் நட்ட சேதம் ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களிற்குள் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதும், மேற்குறித்த அவதானிப்பில் சுட்டிக் காட்டியுள்ள ஆரம்ப அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத 122 நட்ட சேதங்களிற்கு மேலதிகமாக சிறைச்சாலைகள் திணைக்களத்தில் 1998 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையான காலத்தினுள் ஏற்பட்டுள்ள 34 நட்ட சேதங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | வாகன விபத்துக்களிற்குரிய முழுமையான அறிக்கைகளை குறித்த நிறுவனங்களிலிருந்து விரைவில் பெற்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது | தொடர்புடைய நிதிப்பிரமாணம் பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலக்கம் NC-5426 கொண்ட வண்டிக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக டொயோடா லங்கா நிறுவனத்தினால் 2022 சனவரி 05 திகதி மற்றும் 2022 ஒக்டோபர் 19 திகதி முறையே ரூபா 4,974,724 மற்றும் ரூபா 8,656,243 ஆன இரண்டு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.<br>அவ்வாறாயினும், 2022 ஜுன் 18 திகதிய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன கடிதம் பிரகாரம், திருத்தம் மேற்கொண்டு பரீட்சிப்பிற்கு சமர்ப்பிக்க அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனில் அதற்கான காரணத்தை குறிப்பிடுக எனும் அறிவுருத்தலிற்கு பதில் அளித்திருக்கவில்லை. அதன் மூலம் நிதிப்பிரமாணம் 156(1) பிரகாரம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை இனங்கண்டு அதை தீர்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறாயினும் 104(4) பிரகாரம் விபதர்து ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களிற்குள் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதும், கணக்காய்வு | மதிப்பீட்டிற்கான அங்கீகாரம் வழங்கல் தாமதித்தன் மீது இந்த திருத்தத்தை அங்கீகார காலத்தினுள் செய்து கொள்ள முடியாது போனதால் காப்புறுதி நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்யுமாறு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு 2022 சனவரி 12 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டள்ளது. இந்த திருத்தத்திற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது அரச பெறுகைகள் செயற்பாட்ட உரியவாறு மேற்கொள்ள செலவிட வேண்டிய காலஎல்லை ஆகையால் இக் காலம் அலுவலர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 103, 104 மற்றும் 156(1) பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிவரையும் அவ் அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ஊ) | அங்குனகொலபெலஸ்ஸ, நீர்கொழும்பு, களுத்துறை சிறைச்சாலை நிறுவனங்களில் மற்றும் தலுபொத இளைஞர் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்தில் 2023 ஆண்டினுள் மின் பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்கையில் உரிய காலப் பகுதியினுள் கொடுப்பனவு செய்யாததால் தண்டப்பணமாக (மிகையறவீடு) ரூபா 1,392,311 தொகை மற்றும் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 2023 ஆண்டினுள் நீர் பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்கையில் உரிய காலப் பகுதியினுள் கொடுப்பனவு செய்யாததால் தண்டப்பணமாக (மிகையறவீடு) ரூபா 188,306 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முற்பணம் கிடைத்தவுடனே தாமதமின்றி சிறைச்சாலை நிறுவனங்களிற்கு முற்பணம் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 780 பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |

**3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது 2023 திசெம்பர் மாதம் 31 தினங்களில் வெலிகட சிறைச்சாலையனி கைதிகள் 233 சந்தர்ப்பங்களில் அலுவலர்களின் வீட்டு வளவுகளில் சேவையில் ஈடுபடுத்தியிருந்ததுடன், சிறைச்சாலை ஒழுங்குபடுத்தல் அலுவலர்களின் 234 மனித நாட்களும் அதற்காக செலவிடப்பட்டன. இந்த காலப்பகுதியில் வீட்டு வளாகங்களிற்கு சிறைக் கைதிகளை கொண்டு செல்வதற்கு 62 சந்தர்பங்களில் சிறைச்சாலை தலைமையக 09 வாகனங்கள் 372 கிலோமீற்றர் தூரம் செலுத்தப்பட்டிருந்தன. 2023 ஜனவரி 27 திகதிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 மூலம் மேலதி நேர செலவையும் கடுமையாக கட்டுப்படுத்துவ அத்தியஷியமென வலியுருத்தி இருக்கையில், 2023 ஆண்டில் மேலதி நேரம் மற்றும் விடுமுறை தின படிகளாக ரூபா 982 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், அது 2022 ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 106 மில்லியன் அதிகரிப்பாகும். | சிறைச்சாலை அன்றாட சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதால் சிறைக் கைதிகளை ஈடுபடுத்தி சிறைச்சாலை வளாகத்தை சுத்திகரிப்பது அத்தியவஷியமற்ற செயலாக புரக்கணிக்க முடியாததால், 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் மேலதிக நேர படிகள் ரூபா 106 மில்லியன் அதிகரிக்க மேற்குறித்த விடயம் தாக்கம் செலுத்தவில்லை எனவும் நீதிமன்ற சிறைச்சாலை செயற்பாடுகள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சின் செயலாளரின் இலக்கம் MOJ/E10/அதி/அனு/தெ/2023 மற்றும் 2023 செப்டம்பர் 12 திகதிய கடிதம் மூலம் அலுவலர்களினால் சம்பாதித்துக் கொள்ளும் மொத்த மேலதிக நேர அளவு 200 மணி நேரத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் காரணமாக என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 ஜனவரி 27 திகதிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2023 ஜனவரி 27 திகதிய விநியோகிக்கப்பட்ட இலக்கம் 01/2023 கொண்ட வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் 2 (இ) (III) பந்தியில் குறிப்பிடுவதன் பிரகாரம் 1003 செலவின விடய குறியீட்டின் கீழ் கொடுப்பனவு செய்யும் போது உண்மையான கடமை தேவைப்பாடு காணப்படும் செலவுகளிற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், அதற்கு இணங்காது ஜெயிலர்களின் இரவு நேர ரோந்து காவல் பயணத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்தப் பயிற்சி நிலையத்தின் கைதிகள் இரவு நேரத்தில் தடுத்து வைக்கப்படாவிட்டாலும், அவ்வளாகத்தில் ஜெயிலர்கள் இரவு நேர ரோந்துப் பயணத்திற்காக 2023 ஆண்டினுள் 12 சந்தர்பங்களில் ரூபா 125,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்தப் பயிற்சி நிலையத்தில் ஜெயிலர்கள் இரவு நேரம் பயணிப்பது தொடர்பாக விரைவில் விசாராணை நடாத்தி செலுத்தியுள்ள தொகையை மீள் அறவிடுவது தொடர்பாக முன்நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 ஜனவரி 27 திகதிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.8 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதில் வழங்கப்படாமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்வரும் கணக்காய்வு ஐயவினாக்களிற்கு 2024 ஜூலை 17 திகதி வரை பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு 2024 ஜூலை 17 திகதியளவிலும் பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களிற்கு விரைவில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென கணக்காய்விற்கு அறிவிக்கிறேன். | 2018 இன் 19 கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (உ) பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 155 பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் வேறு ஏதேனும் அலுவலரினால் தனக்கு விழிக்கு எழுத்துமூல மற்றும் வினவல் தொர்பாக தாமதமின்றி செயற்பட்டு பூரண பதில் வழங்க கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைத் தொகை செலுத்த முடியாத குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படுவதுடன், அந்த சிறை கைதிகளின் பிணைத் தொகை செலுத்தப்பட்டு விடுதலை கட்டளை கிடைத்தவுடனே அவர்களை சிறை தண்டனையிலிருந்து விடுவிக்க வேண்டும். எனினும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 ஜனவரி மாதம் பிணைத் தொகை செலுத்தி விடுதலை கட்டளை கிடைத்த திகதியிலேயே சிறை தண்டனையிலிருந்து விடுவிக்கப்படாத 121 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | நீர்கொழும்பு சிறைச்சாலையுடன் தொடர்புடைய மினுவாங்கொடை, மாரவில, சிலாபம், புத்தளம், கல்பிட்டி மற்றும் ஆனமடுவ ஆகிய நீதிமன்றங்களால் பிணை உத்தரவு பிறப்பிக்கப்படும் போது அந்த பிணை உத்தரவு நீர்கொழும்பு சிறைச்சாலையின் சிறைச்சாலை பதிவுப் பிரிவுக்கு வருவது நீதிமன்ற பாதுகாப்பு முடிவடைந்த பின்னராவதுடன், அதன் போது நீதிமன்ற அலுவலகப் பணிகள் முடிவடைவதால் மறுதினம் அந்த பிணைதாரர்கள் நீதிமன்றத்தில் நிருத்தப்படுதல் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பிணைத் தொகை செலுத்தி விடுதலை கட்டளை கிடைத்த தினத்திலேயே சிறை கைதிகளை சிறை தண்டனையில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தண்டப்பணம் செலுத்த முடியாத குற்றவாளிகள் சிறைப்படுத்தப்படுவதுடன், அந்த சிறை கைதிகளின் தண்டப்பணம் செலுத்தப்பட்டு விடுதலை கட்டளை கிடைத்தவுடன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். எனினும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 சனவரி 01 முதல் 2023 ஜுன் 30 வரையிலான காலப்பகுதியில் விடுதலை கட்டளை கிடைத்த திகதியிலேயே சிறை தண்டனையிலிருந்து விடுவிக்கப்படாத 292 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | நீர்கொழும்பு சிறைச்சாலையுடன் தொடர்புடைய மினுவாங்கொடை, மாரவில, சிலாபம், புத்தளம, கல்பிட்டி மற்றும் ஆனமடுவ ஆகிய நீதிமன்றங்களால் விடுதலை உத்தரவு பிறப்பிக்கப்படும் போது அக் கட்டளை நீர்கொழும்பு சிறைச்சாலையின் சிறைச்சாலை பதிவுப் பிரிவுக்கு வருவது நீதிமன்ற பாதுகாப்பு இரவு நேரத்தில் சிறைச்சாலைக்கு வந்த பின்னராகும். இரவு நேரத்தில் சிறைக் கைதிகளை விடுவிக்க சட்டரீதியான இயலுமை இல்லாததால் மறுதினம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் சிறைச்சாலை மூடப்படுவதற்கு முன்னர் பெறப்படும் விடுதலை அன்றைய தினம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது | விடுதலைக் கட்டளை கிடைத்தவுடனே சிறை கைதிகளை சிறை தண்டனையில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சட்ட விரோதமாக கையடக்க தொலைபேசி வைத்துக் கொண்டு சிறைக் கைதிகளினால் சிறைச்சாலைக்கு வெளியே வெளித் தரப்பினர்களுக்கு எடுக்கும் அழைப்புக்களை | இந்த தொகுதி அரச பாதுகாப்பு அமைச்சின் கீழ் செற்படும் ஓர் செயன்முறை ஆகையால், அந்த தொகுதி தொடர்பாக சிறைச்சாலைகள் திணைக்களத்தால் எந்த | தொலைபேசி சமிக்ஞை தடுப்பு தொகுதியை நிறுவியதன் நோக்கங்களை அடைவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | தடுக்கும் வகையில் சிறைச்சாலைகளில் அமைக்கப்பட்டிருந்த தொலைபேசி சமிக்ஞை தடுப்பு முறைமைகள் உரிய முறையில் செயற்படுவதில்லை என நிர்கொழும்பு மற்றும் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கையும் அல்லது கையாளுதலும் சாத்தியம் இல்லை. அதன் பிரகாரம் அந்த தொகுதியில் காணப்படும் அனைத்து பிழைகள் குறித்தும் அரச பாதுகாப்பு அமைச்சகத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரியவாறு சமிக்ஞை தடுப்பு முறையை செயல்படுத்த வேண்டும். |
| (ஈ) | தாபன விதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் பத்தி 5.2.1 இன் பிரகாரம் பட்டியற்படுத்திய இல்லங்களைப் பெற தகுதியற்ற (பொது சேவை இல்லைங்களைப் பெற்றுக் கொண்ட) திருமணமான அலுவலர் ஒருவரின் சம்பளத்தில் 12 1/2 சதவீதம் வீட்டு வாடகை அறவிட வேண்டிய போதும், அதற்கு இணங்காது 2023 ஆண்டில் 05 சிறைச்சாலை நிறுவனங்களில் பட்டியற்படுத்திய இல்லங்களைப் பெற தகுதியற்ற 76 திருமணமான அலுவலர்களிடமிருந்து ரூபா 2,334,509 வீட்டு வாடகையாக அறவிட வேண்டிய போதும், வீட்டு வாடகையாக சம்பளத்தில் 10 சதவீதம் மாத்திரம் அதாவது ரூபா 1,864,952 அறவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 469,557 குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியதன் பிரகாரம் தாபன விதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் பத்தி 5.2.1 இன் பிரகாரம வீட்டு வாடகையை அறவிட அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள ரூபா 469,557 நிலுவைத் தொகையை குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட அறிவுருத்தல் வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் பத்தி 5.2.1 இன் பிரகாரம செய்யப்பட வேண்டும். |
| (உ) | நிதிப் பிரமாணம் 210 இன் பிரகாரம் தள்ளுபடி பெற்றுக் கொள்ள முடியுமான அனைத்து சந்தர்பங்களிலும் அந்த வட்டத்தை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டிய போதும், அகுனகொலபெலஸ்ஸ, களுத்துறை, நீர்கொழும்பு, வட்டரக மற்றும் தலுபத இளைஞர் குற்றவாளிகள் சீர்திருத்த நிலைய 15 கணக்குகள் தொடர்பாக 2023 ஆம் ஆண்டிற்கான நீர் பட்டியல்கள் உரிய காலத்தினுள் செலுத்தப்படாததனால் ரூபா | முற்பணம் வழங்கப்பட்டவுடன் தாமதமின்றி சிறைச்சாலை நிறுவனங்களுக்கு முற்பணத்தை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 210 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 488,461 அளவான தள்ளுபடியை பெற்றுக்கொள்ள இயலாதிருந்தது. | | |
| (ஊ) | சிறைச்சாலையினால் அரச துறைக்கு மேற்கொண்ட விற்பனைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 148,826,252 மீதியினுள் 20 ஆண்டுகளை விட பழைய ரூபா 2,377,921 மற்றும் ஆண்டு 5-20 இடையிலான ரூபா 23,643,153 மீதி மற்றும் தனியார் துறைக்கு மேற்கொண்ட விற்பனைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 35,618 மீதியினுள் 20 ஆண்டுகளை விட பழைய ரூபா 19,034 மற்றும் 10-20 ஆண்டுகளுக்கு இடையில் ரூபா 16,584 ஆன மீதிகள் நீண்ட காலமாக உள்ள போதும், அவை நிதிப்பிரமாணம் 502(ஆ) பிரகாரம் தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கைதொழில்துறை அலகுகளை நடாத்திச் செல்லும் சிறைசாலை நிறுவனங்களால் பொதுத் துறைக்கு செய்யப்படும் விற்பனையின் போது ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் பட்டியல்கள் தீர்க்கப்படும் போது ஓரளவு நிலுவை பட்டியல்கள் வருடாந்தம் நிலவுகின்றது. இந்த நிலுவை பட்டியல்களில் அதிகளவு 2015 க்கு முந்தியவைகள ஆவதுடன், இது தொடர்பாக மிகவும் சரியான குறிப்பிடல்கள் எதுவும் இல்லாததுடன், நிலுவை பட்டியல்கள் தீர்ப்பதற்கு அறிவுரை வழங்கிய போதும் பழைய பட்டியல்கள் காணாம் போயுள்ளதால் சரியான புள்ளிவிவரங்களை பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தனியார் துறையிடம் இருந்து பெற வேண்டிய ரூபா 35,618.00 தொகை குறித்து சரியான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதால், அறவிடும் சிரமம் காணப்படுவதுடன், 2013 ஆண்டு முதல் அவ்வாறான மீதிகள் இல்லையென அறிவிக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் 502(ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளை தழுவி சிறைகைதிகளின் மன மற்றும் உடல் தகுதிக்கு ஏற்ப போதுமான இடவசதிகளும் இருக்க வேண்டிய போதும், 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் பிரகாரம் 05 சிறைச்சாலை நிறுவனங்களின் 62 சிறைச்சாலை வாட்டுக்களில் தடுத்து வைக்கப்பட வேண்டிய கைதிகளின் எண்ணிக்கையை விடவும் 2,601 பேர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அங்குனகொலபெலஸ்ஸ | எல்லா நேரங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களின் பிரகாம் மற்றும் சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு பிரகாரம் சிறைகைதிகள் மற்றும் சந்தேக நபர்களின் தடுப்பு அடிப்படைகளை பாதுகாக்கவும், வகைப்படுத்தல் பிரகாரம் தடுத்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சிறந்த முயற்சிகள் எடுக்கப்படும் என அறிவிப்பதுடன், ஏனைய வழக்கு நடவடிக்கைகள் காணப்படும் கைதிகளை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் வசதி கருதி அந்த நீதிமன்றத்திற்கு அண்டிய சிறைச்சாலைகளில் தடுத்து வைத்துள்ளதால் இடவசதியுடன்கூடிய ஏனை | ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியமங்கள் மற்றும் சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் (54 அதிகாரம்) 94 பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட 179 விதிக்கு மற்றும் உள்ளக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சிறைச்சாலையில் 12 வாட்டுகளில் தடுத்து வைக்க முடியுமான கைதிகளை விடவும் குறைவாக 127 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். | சிறைச்சாலைகளிற்கு மாற்றம் செய்யாதது அதற்காக மேலதிக கிரயத்தை செய்ய வேண்டியுள்ளதால் என மேலும் அறிவிக்கிறேன். | |
| (ஏ) | நீதிமன்றத்தின் மூலம் சிறைப்படுத்தியுள்ள சந்தேக நபர்கள் தொடர்பாக பொலிஸினால் இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்த போதைப் பொருள் மாதிரிகளுக்கான இரசாயனப் பகுப்பாய்வாளர் அறிக்கை இது வரை முன்வைக்கப்படாததால் 2023 மாதிரி பரீடசிப்பின் பிரகாரம் அங்குனகொலபெலஸ்ஸ, களுத்துறை மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் சிறைப்படுத்தியுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை 1,421 ஆகும். | அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் மூலம் இந்த சந்தேக நபர்களின் இரசாயனப் பகுப்பாய்வாளர் அறிக்கை வழங்குவதன் தாமதம் காரணமாக அவர்கள் நீண்டகாலமாக சிறையில் இருக்கும் நிலைமை சிறைச்சாலை திணைக்களத்தினால் கட்டுப்படுத்த முடியுமான நிலைமையல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது. | இரகசிய பரிசோதனை அறிக்கையை விரைவில் பெற்றுக் கொள்வதன் மூலம் சந்தேக நபர்களிற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதனை முறையாக்க வேண்டும். |
| (ஐ) | மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது 2023 ஒக்டோபர் 01 திகதி வரை நீதிமன்றத்தினால் புனர்வாழ்விற்கு உத்தரவு வழங்கி புனர்வாழ்வு நிலையங்களிற்கு அனுப்பும் எதிர்பார்ப்பில் 06 மாதங்களிற்கு அதிகமாக அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ள கைதிகளின் எண்ணிக்கை 45 ஆகும். | நிகழ்சித் திட்டத்தை செயற்படுத்த போதிய பௌதீக வளங்களை பெற்றுக் கொள்ள தேவையான ஏற்பாட்டினை வருடாந்த மதிப்பீட்டின் கீழ் கோருவதற்கு நடவடிக்கை எடுப்பதெனவும் தேவையான மனிதவளத்தை பெற்றுக் கொள்ள தேவையான சந்தர்ப்பங்களில் வெளித் தரப்பினரின் உதவியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | புனர்வாழ்விற்கு தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை போதியளவு பெற்றுக் கொண்டு சிறைக் கைதிகளை முறையாக புனர்வாழ்வு அளிக்க வேண்டும். |
| (ஓ) | அங்குனகொலபெலஸ்ஸ, வடரக, நீர்கொழும்பு, வெலிகட, மஹர மற்றும் போகம்பர ஆகிய சிறைசாலை நிறுவனங்களில் 2023 சனவரி முதல் நவம்பர் மாத இறுதி வரையான காலத்தினுள் மீண்டும் மீண்டும் சிறைப்படுத்தப்பட்டுள்ள சிறை கைதிகள் 2,316 ஆகும். மேலும் சிறைச்சாலையில் மீண்டும் மீண்டும் சிறைப்படுத்தப்படுபவர்களை இனங்காண ஒழுங்கான முறைமையொன்று கூட சிறைச்சாலையினுள் | சிறைகைதிகள் மீண்டும் மீண்டும் சிறைப்படுத்தப்படுவது பெரும்பாலும் போதைக்கு அடிமையானவர்கள் ஆவர். போதைப்பொருள் புனர்வாழ்வின் போது அவர்களுக்குத் தேவையான ஆலோசனைச் சேவை அபாயகரமான மருந்துக் கட்டுப்பாட்டுச் சபையின் ஆலோசனை அதிகாரிகள் ஊடாக வழங்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. | மீண்டும் மீண்டும் சிறைப்படுத்தப்படுவதனை குறைத்துக் கொண்டு மற்றும் முறையான புனர்வாழ்வு செயல்முறை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாததுடன், தற்போது அந்த சிறைக் கைதிகளை இனங்காண்பது அவர்களினால் வழங்கும் வாய்மொழிமூல தகவல்களின் பிரகாரம் ஆகுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஓ) | சிறைச்சாலைகள் கட்டளை சட்டத்தின் 54 பந்திக்கு உரியதாக 1956 ஆண்டில் மேற்கொண்ட திருத்தங்களின் 223 அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொறு சிறைக் கைதிகளிற்கும் அட்டவணை II இல் குறிப்பிடப்படும் ஏற்பாட்டின் அளவின் பிரகாரம் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சிறை சீரடை அணிவது மற்றும் பயன்படுத்துவது வேண்டிய போதும், அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 2023 நவம்பர் 13 திகதி வரை 500 சிறைக் கைதிகளிலும் அதிக எண்ணிக்கையினர் இருந்த போதும் அவர்களிற்கிடையில் 75 சிறைக் கைதிகள் மாத்திரம் சிறை சீருடை இல்லாததால் தங்களின் தனிப்பட்ட ஆடைகளை பயன்படுத்துகின்றனர். ஏனைய சிறைக் கைதிகளிற்கு வழங்கப்பட்டுள்ள சீருடைகளும் நள்ள நிலையில் இல்லையென அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொறு சிறைச்சாலை கைதிகளும் தேவையான சீருடைகளை சிறைச்சாலை தலைமையக களஞ்சியப் பிரிவினால் பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களிற்கும் அறிவுரை வழங்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சிறைச்சாலைகள் கட்டளை சட்டத்தின் 54 பந்திக்கு உரியதாக 1956 ஆண்டில் மேற்கொண்ட திருத்தங்களின் 223 அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | சிறைச்சாலையில் காணப்படும் அசாதாரண நெரிசலிற்கு போதைப் பொருள் தொடர்பான தவறு காரணமாக சிறைப்படுத்தப்படல் முக்கிய காரணமாவதுடன், அது தொடர்பான கைதிகளின் அநேகமானவர்கள் பாவனைக்கு அடிமையானவர்கள் ஆகையால் எந்த வகையிலாவது தேவையான போதைப் பொருள் அளவை பெற்றுக் கொள்ள அவர்கள் முயற்சிப்பதுடன், அவ்வாறான நிலைமையை தடுப்பது சிறைச்சாலை அலுவலர்களிற்கு அதிக கவனம் | போதைப் பொருள் புனர்வாழ்வின் போது தேவையான மதியுரை சேவைகள் ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனை அலுவலர்களின் ஊடாக வழங்கப்படுகின்றன. போதைப்பொருள் பாவனையால் காப்பிற்குட்படும் கைதிகளின் அளவு அதிகம் பெறுமானத்தை கொளவதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை அறிவுருத்துமாறு நீதவான் அவர்கள் அறிவுருத்தப்பட்டுள்ளார்கள். சிறைச்சாலை நலன்புரி பிரிவின் மூலமும் இந்த போதைப் பொருள் | காலத்தின் தேவைக்கு பொருத்தமானவாறு சிறைக் கைதிகளை நட்பிரசைகளாக வெளியனுப்ப தேவையான சமூக பின்னனியை தயாரிப்பது திணைக்களத்தின் பிரதான கடமைகளில் ஒன்றாவதால் அதனுடன் தொடர்பான ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்த வேண்டியுள்ளதால் சிறைச்சாலை முக்கிய நோக்கத்தை அடைந்து கொள்வதை போன்றே சிறைச்சாலை உள்ளக பாதுகாப்பு மற்றும் செயற்பாடுகளிற்கு தடையாகவுள்ளது. இது தொடர்பாக நீர்கொழுப்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 ஆகஸ்ட் 27 திகதி வரை மொத்த கைதிகளின் எண்ணிக்கையான 2,225 இன் 65 சதவீதம் அதாவது 1,442 உம், களுத்துறை சிறைச்சாலையில் 2023 செப்டம்பர் 19 திகதி வரை கைதிகளின் மொத்த எண்ணிக்கையான 1,275 இன் 69 சதவீதம் அதாவது 885 போதைப் பொருள் குற்றம் தொடர்பான கைதிகளாகும். | பாவனை தொடர்பாக அறிவுருத்தும் நிகழ்சித் திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றனந. | வேண்டும். |
| (க) | அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 2023 செப்டம்பர் 30 திகதி வரை சிறைக் கைதிகளால் முன்வைக்கப்பட்டு தீர்க்கப்படாத 03 மாதங்களை விஞ்சிய 145 மேன்முறையீடுகள் ஆனதுடன், அவற்றில் 106 ஆனது 02 ஆண்டுகளை விஞ்சியதாகும். | சிறைக் கைதிகளால் மேன்முறையீடு முன்வைக்கப்பட்டு இது வரை தீர்க்கப்படாத 145 மேன்முறையீட்டு சிறைக் கைதிகள் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், கொவிட் தொற்று நோயின் முன் அக்காலம் முதல் இது வரை மேன்முறையீட்டு கைதிகள் ZOOM தொழிநுட்பத்தின் ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் செய்யப்படுகின்றனர். | மேன்முறையீடுகளை விரைவில் தீர்க்க உரிய ஏற்பாடுகளை தயார் செய்து கொடுக்க வேண்டும். |
| (கா) | மதிப்பிற்குரிய நீதிமன்றத்தினால் சிறைப்படுத்தப்படும் சிறைக் கைதிகளிற்கு பிணை நியமிக்கப்பட்டிருந்த போதும், குறித்த கைதிகளிற்கு பிணை நிபந்தனைகளை நிறைவு செய்ய முடியாததால் நீரிகொழும்பு சிறைச்சாலையில் 2023 ஆகஸ்ட் 15 திகதி வரை நீண்ட காலமாக சிறைச்சாலைபட்டுள்ள சிறைக் கைதிகள் 229 ஆக அவதானிக்கப்பட்டது. | பிணை நிபந்தனைகளை நிறைவு செய்ய முடியாததன் மீது இவ்வாறு சிறைச்சாலைபட்டுள்ள சிறைக் கைதிகள் தொடர்பாக 1991 இன் 08 இலக்க சிறைப் பொறுப்பிலுள்ள சிறைக் கைதிகளை விடுவிக்கும் சட்டத்தின் கீழ் காணப்படும் சடடகத்தினுள் அது தொடர்பாக குறித்த நீதிமன்றத்தை அறிவுருத்தி அவர்களை ஆட்பிணையில் விடுவித்தல், குற்றத்தை ஒப்புக் கொண்டு சிறைத் தண்டனையை பெற்று வழக்குகளை முடிவுறுத்தல் மற்றும் வழங்கியுள்ள பிணை நிபந்தனைகளை இலகுபடுத்தி | பிணை நிபந்தனைகளை விரைவில் பூர்த்தி செய்ய தேவையான நடடிக்கைகளை தயார் செய்து கொடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிவாரணம் வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன், நீதவான் அவர்களை இது தொடர்பாக அறிவுருத்தி அந்த நீதிமன்றத்திற்கு பிணை வைத்துக் கொள்ள முடியாத கைதிகள் தொடர்பாக பெயர் பட்டியலொன்றை சமர்ப்பித்தல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் அலுவலகத்தின் அங்கீகார அலுவலர் எண்ணிக்கையில் 7,872 ஆனதுடன், உள்ளவாறான அலுவலர் எண்ணிக்கை 6,173 ஆனதில் 02 பதிகளிற்குரியதாக மிகை அலுவர்கள் 18 மற்றும் 79 பதவிகளிற்குரிய வெற்றிட அலுவலர்கள் 1,717 ஆகக் காணப்பட்டன. | அரசினால் அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் நிறுத்தியுள்ள சந்தர்பத்திலும் கூட, புதிய அலுவலர்களை ஆட்சேர்பது தொடர்பில் அசைச்சின் செயலாளரின் 2023 சனவரி 04 திகதி கடிதம் மூலம் அங்கீகாரம் வழங்கியுள்ளவாறு சிறைச்சாலை ஒழுங்குபடுத்துன்ர் 300 (ஆண்) மற்றும் (47) பெண் சிறைச்சாலை ஒழுங்குபடுத்துனர்கள் 347 இற்காக ஆட்சேர்புடன் தொடர்பான விண்ணபங்களை கோரி பரீட்சை ஆணையாளரின் அறிவுரை பிரகாரம் 2024 மாரச் 16 திகதி போட்டிப் பரீட்சை நடாத்தி அதன் பெறுபேற்றின் மீது எதிர்காலத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்தவும், ஆட்சேர்பு மேற்கொண்டு பயிலுனர் பயிற்சி வழங்கப்படவும் உள்ளது. அதன் பிரகாரம் நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப பொருத்தமானவாறு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆக்கபூர்வ சேவை மட்டத்தை பேணிக் கொள்ள ஆளணியினர் மீளாய்வொன்றை மேற்கொண்டு அதன் பிரகாரம் தேவைான நடவடிக்கை மேற்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் 14 சிறை வைத்தியசாலைகளிற்கு உரியதாக தரத்துடனான 22 மிகை மருத்துவர்கள் மற்றும் 05 சிறை வைத்தியசாலைகளிற்கு உரியதாக தரத்துடனான 09 மருத்துவ வெற்றிடங்கள் நிலவியதுடன், 04 சிறை | சிறைச்சாலைகள் திணைக்களத்துடன் தொடர்புடைய சிறை வைத்தியசாலைகளிற்கு மருத்துவர்கள் இணைக்கப்படுவது சுகாதார அமைச்சினூடாக ஆகையால் மருத்துவர்களின் செயற்லாற்றகை தொடர்பாக | சிறை வைத்தியசாலைகளிற்கு மருத்துவர்களை இணைக்கும் போது தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு சுகாதார அமைச்சுடன் ஒன்றிணைந்து முறையான வேலைத் திட்டத்தை செயல்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலைகளில் 05 மேலதிக பதிவுசெய்த மருத்துவர்கள் மற்றும் 03 சிறை வைத்தியசாலைகளில் 05 வெற்றிட பதிவுசெய்த மருத்துவர்களும் ஆவர். 2023 ஜூன் 09 திகதி நிலவிய அரச கணக்குகள் மீதான செயற்குழுவினால் வழங்கிய கட்டளைகளை அமுல்படுத்துவதற்குரியதாக மருத்துவர்கள் சிறை வைத்தியசாலைகளிற்கு வருகை மற்றும் வெளிச் செல்லல் தொடர்பாக நுழைவாயில் பதிவேடுகளில் உள்ளடங்கும் தகவல்கள் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தினால் சுகாதார பணிப்பாளர் நாயகம் அவர்களிற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ள போதும் சில சிறை வைத்தியசாலைகளிற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றும் மருத்துவர்களின் விபரங்கள் மாத்திரம் அனுப்பப்பட்டிருந்ததுடன், அவைகள் கூட முறையாக தயாரிக்கப்பட்ட அறிக்கையாக இருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பது சிறைச்சாலைகள் திணைக்கள நிருவாகத்திற்கு அப்பாற்பட்ட விடயமொன்ரென தெரிவிக்கப்படுகிறது.<br><br>மேலும் மருத்துவர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் அறிக்கைகள் ஒவ்வொரு மாதமும் 05 ஆம் திகதிக்கு முன்னதாக சிறைச்சாலை தலைமையகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு இலக்கம் - டீ22/சுகாதாரம்/2017(1) மற்றும் 2023 ஆகஸ்ட் 10 திகதி மற்றும் 2023 திசெம்பர் 22 திகதிய கடிதங்கள் மூலம் அனைத்து சிறைச்சாலை நிறுவனங்களுக்கும் தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இதுவரை கிடைத்துள்ள 2024 ஏப்ரல் மாதம் வரை மருத்துவர்களின் வருகை மற்றும் வெளச் செல்லல் அறிக்கைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. | வேண்டியது மற்றும் 2023 ஜூன் 09 திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் மீதான செயற்குழுவினால் வழங்கிய கட்ளைகள் அமுல்படுத்த வேண்டும். |
| (இ) | பிரதான சிறைக் காவலர் பதவிக்காக சேவை முதிர்வு மற்றும் தகுதி அடிப்படையில் பதவி உயர்வின் போது சிறைக் காவலர்கள் சங்கத்துக்குரிய பதவிகள் தொடர்பான பதவிகளை வகித்ததற்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ள போதும், சுமார் கடந்த நான்கு ஆண்டு காலத்தினுள் பொதுச் சபை கூட்டங்கள் நடாத்தப்படாததால் ஏனைய அலுவலர்கிற்கும் இந்த பதவியை பெற்றுக் கொள்வதற்கு காணப்பட்ட இயலுமை தடுக்கப்பட்டுள்ளதால் மற்றும் சிறைக் காவலர்கள் சங்கத்தின் பதவி வகித்த போதிலும் போதியளவான செயலாற்றுகை | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதவாறு சிறைச்சாலை அலுவலர்கள் அங்கம் வகிக்கும் அனைத்து சங்கங்களினதும் செயற்பாடுகளை ஒழுங்கான முறையில் நடாத்திச் செல்ல தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடம்பெற்றில்லாததால் பதவி வகித்தமை மாத்திரம் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகளை வழங்குவதன் முலம் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த ஏனைய அலுவலர்களிற்கு அநியாயம் இடம்பெற்றிருந்தது. | | |
| (ஈ) | பொதுச் சேவை ஆணைக்குழுவின் கடமை நடைமுறை விதி இலக்கம் 251 இன் பிரகாரம் புவியியல் ரீதியாக ஒரே பிரதேசத்தில் அமைந்துள்ள சேவை நிலையம் ஆவதுடன், இடமாற்றம் பெற்று அலுவலர்கள் ஒரே பிரதேசத்தில் இருப்பதங்கு முயற்சிப்பதனை தடுப்பதற்காக வருடாந்த இடமாற்றக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டும். மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது, 2024 மார்ச் 31 திகதி வரை 10 சிறைச்சாலை நிறுவனங்களின் 377 அலுவலர்கள் சிறைச்சாலைக்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 06 முதல் 25 ஆண்டுகளிற்கு இடையிலான காலமான ஒரே சிறைச்சாலையில் தொடர்ந்து பணியாற்றுவதாக அவதானிக்கப்பட்டது. இவற்றில் 29 அலுவர்கள் இதற்கு முன்னரும் அந்த சிறைச்சாலை நிறுவனங்களிற்கு இணைக்கப்பட்டு சேவையாற்றியுள்ளதாகவும் மேலும் அவதானிக்கப்பட்டது. | நாடளாவிய ரீதியில் பிராந்திய நிறுவனங்கள் சிறிய அளவில் காணப்படுகின்றமை, தற்போது நாட்டில் நிலவும் அதிக பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அரச உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பாரிய பொருளாதாரச் நெருக்கடிகளை கருத்திற்கொண்டு செலவுகளை முகாமைததுவம் செய்து கொள்ளும் நோக்குடன் தான் வசிக்கும் கிராம பிரதேசங்களில் உள்ள அரச சேவை நிலையங்களில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்குரியதாக பணிக்காலம் நிறைவடையும் அனைத்து அலுவலர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்ததுடன், அலுவலர்களின் நியாயமான காரணங்களிற்காக சில அலுவலர்களிற்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை. அதன் பிரகாரம் சிறைச்சாலைகளிற்கு மாற்றம் பெற்று வந்த அலுவலர் எண்ணிக்கைக்கு உரியதாக மாத்திரம் விடுவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பொதுச் சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் பிரகாரம் வருடாந்த இடமாற்றக் கொள்கைகளை தயாரித்து செயல்படுத்த வேண்டும். |